விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 01 புதன்கிழமை (17.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

### பொலிஸாரின் தடைகளைத் தகர்த்தெறிந்து கொழும்பில் திரண்ட மக்கள் கூட்டம்

# இது ஆரம்பம் மட்டுமே

# போராட்டம் தொடரும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



(கொழும்பு) இது ஆரம்பம் மட்டுமே. மக்களின் வாழும் உரிமை உறுதிப்படுத்தப் படும்வரை போராடுவோம். உயிர்த் தியாகம் செய்வதற்கும் நாம் தயார் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாருக்கு தகவல் வழங்கியவரின் மோ.சைக்கிள் அடித்துடைப்பு

(அராலி)
பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் 15

## கொரோனா 18 மரணம் 720 தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற் றால் நாட்டில் மேலும் 15

## வடக்கில் மேலும் 32 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 15 பேர் உட்பட வடக்கு மாகா ணத்தில் 32 பேருக்கு 15

## சஜித் கொத்தணி உருவாகும் ஆபத்து

### காணி அமைச்சர் சந்திரசேன

(கொழும்பு)
“கொரோனாவுடன் விளை யாடக்கூடாது. போராட்டம் நடத்தி அரசியல் செய்வதற்கான நேரம் இதுவல்ல. எதிரணியின் போராட் டத்தால் ‘சஜித் கொத்தணி உரு வாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.”

இவ்வாறு காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். 15

### பிரபாகரன் வரப்போகிறாரா?

## பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் 21 சோதனைச் சாவடிகள் எதற்கு?

### சபையில் நளின் பண்டார கேள்வி



(கொழும்பு)
பிரபாரகன் வரப்போகின் றாரா? பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் எதற்கு 21 பொலிஸ் சோதனைச் சாவடிகள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண் டார, கேள்வி எழுப்பி 15

## சித்தன்கேணியில் கோயிலுக்கு சென்ற பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

(அராலி)
கோயிலுக்கு சென்ற 15

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ

(கொழும்பு)
சுகாதாரச் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணி கள் நடத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக ஏற்கெனவே விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் 16

## மாகாண சபையின் நிதிகளை சரியாக செலவு செய்வதில்லை

### வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா


(கொழும்பு)
மாகாண சபையின் நிதி களை சரியான முறையில் செலவு செய்வதில்லை என வடமாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத் தில் அரச அதிபர் தலைமையில் அரச அதிகாரிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரி வித்தபோதே இவ்வாறு தெரிவித் தார்.

‘அவர் மேலும் தெரி 15

## திடீரென முளைத்த சோதனைச் சாவடிகள்

### கொழும்பு சென்ற பேருந்துகளை திருப்பி அனுப்பிய பொலிஸார்



(கொழும்பு)
கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்வதற்காக, ஆதரவாளர்களை ஏற்றிவந்த தனியார் பேருந்துகளை பொலிஸார் திருப்பி யனுப்பினர். 15

## வைரஸுடன் இணைந்து அரசை அழிக்கக்கூடாது

### எதிர்க்கட்சிக்கு வீரசேகர சபையில் உபதேசம்

(கொழும்பு)
கோவிட் வைரஸ் அச்சுறுத் தல் நிலைமையில், எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து வைரஸை அழிக்க வேண்டுமே தவிர, வைரஸுடன் இணைந்து அரசாங்கத்தை அழிக்கக்கூடாது.

ஆனால் அரசாங்கத்தை அழிக்கவே எதிர்க்கட்சி முயற்சிக் கின்றது என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சி யினர் கொழும்பில் 02

ENGLISH CLASSES
Gr. 6 - G.C.E O/L
Grammar with Syllabus
வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும். (8633)
076 375 4053

## வைரஸுடன்...

நேற்று ஏற்பாடு செய்த பல கூட்டங்களை அரசாங்கம் தடுத்து நிறுத்த பொலிஸாரை பயன்படுத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையில் குற்றம் சுமத்திய வேளையில் அதற்கு பதில் தெரிவித்தபோதே அமைச்சர் சரத் வீரசேகர இதனை கூறினார். (ம-03)

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் யாழ். கிளை

கலை வகுப்புகள் மீள ஆரம்பம்

எமது கலாமன்றத்தின் கலை வகுப்புகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மீள 15.11.2021 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் நடைபெற்று வருகின்றதென்பதை சகலருக்கும் அறியத் தருவதுடன் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றோம்.



பதிவாளர் காரைநகர் 077 015 6244
(C-3027)
பதிவாளர் யாழ். கிளை இல. 428, கே.கே.எஸ் வீதி 077 578 6638

# மரண அறிவித்தல்

## இராமன் முருகேசு

(தீவகத்தின் பாரம்பரிய முறிவு நோவு வைத்தியர் – வேலணை)




வேலணை 03ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் முருகேசு அவர்கள் நேற்று (16.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமன் - குஞ்சி தம்பதியரின் இரண்டாவது மகனும் காலஞ்சென்றவர்களான வேலன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இளையபிள்ளையின் அன்புக் கணவரும் மகாலிங்கம் (வைத்தியர் - பரந்தன் ஆயுள்வேத வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் பவானி அவர்களின் அன்பு மாமனாரும் தர்சன் - சந்திரிக்கா, ஐங்கரன் - பாமினி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் நந்தினி, அக்ஷயா, வர்சிகன், டிவிஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நல்லம்மா, புவனேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, அண்ணாமலை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2021) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8640)

வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரம். 076 920 4528 தகவல்:- குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## சிதம்பரநாதன் இளங்குன்றன்

{யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் (40 ஆம் அணி)}

பிறப்பு : 08.09.1997 இறப்பு : 17.11.2020

கொடியோரின் நயவஞ்சகத்தால் உன் திருமுகம் மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும் மறையாது உன் நினைவுகள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3031)

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.
தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.
தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## நாகரட்ணம் அழகசுந்தரம்

**தோற்றம் : 11.04.1942 மறைவு : 16.11.2021**

மாத்தளையைப் பிறப்பிடமாகவும் வவுனியா வெளிக்குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் அழகசுந்தரம் அவர்கள் நேற்று (16.11.2021) செவ்வாய்க்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் நல்லசெல்வம் அவர்களின் அன்புக் கணவரும் கிருபாகரன் (கிருபா லேணர்ஸ்), பிரமிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை, பத்மினிதேவி, தர்மராஜ், ராஜாம்பாள், சிரோன்மணி, திருச்செல்வம், காலஞ்சென்றவர்களான தனபாக்கியம், அமிர்தலஷ்மி, பாக்கியநாதன், புஸ்பரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனித்தா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாயிரா, ஜஸ்விக், லித்விக், ஜகானி, கிருத்திகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2021) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-3032)

இல. 36, RDS வீதி, வெளிக்குளம், வவுனியா. 077 722 5292 தகவல்: குடும்பத்தினர்

# இலங்கையின் ஒட்டுமொத்த வளங்களையும் யுத்த வெற்றியில் முதலீடு செய்து விட்டனர்



## பாராளுமன்றில் சித்தார்த்தன் எம்.பி.ஆதங்கம்

(கொழும்பு)

**மக்களால் சமாளிக்கவே முடியாதளவிற்கு, விலைவாசி உயர்வு, அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்டிருக்கும் மோசமான வீழ்ச்சி, மோசமான நிதி நெருக்கடியென நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இலங்கையின் வரலாற்றில் இதுபோன்ற தொரு நெருக்கடி இதற்கு முன்னர் ஒரு போதுமே ஏற்பட்டதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பாதீடு குறித்து கருத்துரைக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நெருக்கடி நிலைக்கு உண்மையிலே கொரோனாப் பெரும் தொற்று மட்டும் தான் காரணமா? உண்மையில் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல. இது ஒரு புற்றுநோய் போன்று வெகு காலமாக வளர்ந்து வந்த ஒன்று. இப்போது மறைக்க முடியாதளவிற்கு நோய் முற்றிவிட்டது. இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் எவையுமே தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கவில்லை. தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாட்டை காண்பிக்கவில்லை. மாறாக, தமிழ் மக்கள் மீது மேலும் மேலும் ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடுவது பற்றியே சிந்தித்தார்கள்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புறக்கணிப்பட்ட காரணத்தினால் தான் இந்த நாடு ஒரு உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியது. நாட்டின் ஒட்டுமொத்த வளமும் யுத்த வெற்றியில் முதலீடு செய்யப்பட்டது. யுத்த வெற்றிக்காக பல நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையேற்பட்டது. இதனால்தான் நாடு பெரும் கடன் சுமைக்குள் சிக்கியது. அத்துடன் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பின்னடைவைக் கண்டது.

தவறான கொள்கைகளால் விவசாயிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் நடுத்தெருவுக்கு வந்திருக்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈட்டைக் கூட நீங்கள் வழங்கவில்லை. இந்த பாதீட்டில் அதற்கான நிதியும் ஒதுக்கப்படவில்லை.

நாடு வரலாறு காணாத நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் கூட 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்னும் சுலோகத்தின் கீழ், பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில், ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் நீதித்துறை அமைச்சருக்கே அந்த செயலணி பற்றி தெரிந்திருக்கவில்லை.

இந்த அரசாங்கத்தால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமென்பதில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்ற கரிசனை இருந்தால் 13 இல் இருந்து பறிக்கப்பட்ட விடயங்களை மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்குங்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்.

இன்று பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கியிருக்கின்றீர்கள். ஆனால் இந்து மதத்தினதோ அல்லது இலங்கையில் உள்ள ஏனைய மதங்களினதோ வளர்ச்சிக்கு நிதியொதுக்கவில்லை. இங்கும் உங்களுடைய உள்நோக்கம் வேறு என்பதை நாமறிவோம்.

ஒரு காலத்தில் தனிநாடு தொடர்பில் சிந்தித்த தமிழ் தலைமுறை இப்போதில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் எங்கள் பகுதிகளில் எமது அலுவல்களை நாமே நிர்வகித்துக் கொள்ளக் கூடிய கௌரவத்துடனான ஒரு சமஷ்டி அமைப்பு முறையிலான, அரசியல் தீர்வினூடாக நாமும் இந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியில் பங்களிப்பதற்கான வாய்ப்புக்களை பற்றித்தான் நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு இனத்தை ஒடுக்கும் மற்றைய இனம் வளர்ச்சியடைந்ததாக வரலாறில்லை. தேர்தல் வெற்றியை விடுத்து நாட்டின் வெற்றி தொடர்பில் சிந்தியுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# எரிவாயு சிலிண்டர் கிடைக்காததால் லொறி முன்பு அமர்ந்து போராடிய பெண்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படவில்லை என தெரிவித்து, எரிவாயு ஏற்றிச் சென்ற லொறியின் முன் தரையில் அமர்ந்து பெண் ஒருவர் போராட்டம் நடத்தினார்.

வாத்துவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள எரிவாயு விற்பனை நிலையத்திற்கு முன்பாக பெண் ஒருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

போதிய எரிவாயு இல்லை என எரிவாயு முகவர் நிலையத்தின் உரிமையாளர் கூறியதை அடுத்து குறித்த பெண் எரிவாயு சிலிண்டர் லொறி முன்பு தரையில் அமர்ந்து போராட்டம் நடத்தினார். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த பெண்ணுக்கு எரிவாயு சிலிண்டர் தருவதாக உறுதியளித்ததையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

இதேவேளை, நாடு முழுவதும் எரிபொருள் மற்றும் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து, அதனை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அடுத்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமாகும்

## அமைச்சர் அமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் இன்று அதிகரித்துள்ளதாகவும் அடுத்த வருடம் இந்த நிலைமை மேலும் கடினமாகும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். "அரசாங்கம் நிதிப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இன்று நாம் வாங்கிய கடனுக்கான தவணை மற்றும் வட்டியை கட்ட மீண்டும் கடன் வாங்க வேண்டியுள்ளது. அந்தளவுக்கு இன்று நம் நாடு சென்றுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் விலை உயர்ந்து விட்டன என்பது எங்களுக்குத் தெரியும். இதை நாம் இப்போது எதிர்கொள்ள வேண்டும். இது நாளை முடிவடையும் என்று சொல்ல முடியாது.

இந்த நிலை அடுத்த ஆண்டு இன்னும் கடினமாக இருக்கலாம். அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுவதை நாம் அறிவோம். ஆனால் செய்வதற்கு ஒன்றுமில்லை. தற்போது வீடுகள் கட்டுவது கனவாகி வருகிறது. ஒவ்வொரு பொருளின் விலையும் உயர்ந்துள்ளது.

உணவுப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. இதை தொடர்ந்து எதிர்கொள்வோம். எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று உலக உணவுத் திட்டம் கணித்துள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# சினிமாத் துறையை தொழிலாக அங்கீகரிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சினிமாத் துறையை ஒரு தொழிலாக பதிவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தீர்மானம் குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின்போது அறிவிக்கப்பட்டதுடன், இது இலங்கையின் சினிமாத்துறைக்கு ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்க உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF ALLIED HEALTH SCIENCES**

**WALK-IN INTERVIEW**

**Temporary Demonstrator in Nursing and Medical Laboratory Sciences**

Walk –in Interview for the post of Temporary Demonstrator in Nursing and Medical Laboratory Sciences will be held on the following dates :


| Department | Date | Time | Venue |
|---|---|---|---|
| Nursing | 22.11.2021 | 09.00 am | Board Room of the Faculty of Medicine, University of Jaffna. |
| Medical Laboratory Sciences | 30.11.2021 | | |

**Qualifications:-**
A Degree in the relevant subject.
**Note**- Candidates who are awaiting for the results of the final examinations can also attend the interview.
**SALARY SCALE** – Rs.40,920/=p.m (fixed)
In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.
Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and **self-prepared applications.**

**Registrar,**
**University of Jaffna.**

(c-3029)

# மழை வெள்ளத்தில் இருந்து காப்பாற்றும் ஜப்பானின் தொழில்நுட்பம்



(டோக்கியோ)

பூமிக்கடியில் கட்டப்பட்ட சேமிப்புத் தொட்டி தங்களை மழை வெள்ளத்தில் இருந்து காப்பதால் ஜப்பான் மக்கள் அதனை பூமிக்கடியில் ஒரு கோவில் என்று அழைக்கின்றனர்.

உலகெங்கும் நகரங்கள் உருவானபோது பல நாடுகளிலும் இயற்கை அழிப்புகள் நடந்து இருக்கின்றன. அதற்கு அந்த நாடுகள் தற்போது தீர்வும், பரிகாரமும் தேடிக்கொண்டு இருக்கின்றன. இயற்கையை அழித்துவிட்டு, அவற்றை செயற்கையாக தற்போது உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக ஜப்பான் நாட்டை எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு ஆண்டும் மழையால் ஜப்பானின் தலைநகரான டோக்கியோ நகரம் மிகுந்த பாதிப்பு அடைந்து வந்தது. அங்குள்ள வீடுகள் எல்லாம் பல நாட்கள் நீரில் மிதக்கும். அதற்கு அவர்கள் கண்ட தீர்வுதான் பூமிக்கடியில் நீர் வெளியேற்றும் வாய்க்கால் திட்டம்.

டோக்கியோவின் மேல் பரப்பில் இருந்த வாய்க்கால், நீர்நிலைகள் எல்லாம் அழிக்கப்பட்டு கட்டடங்கள் எழும்பி விட்டன. அதனால் அவர்கள் செயற்கையாக பூமிக்கடியில் 50 மீற்றர் ஆழத்தில் மழை நீர் செல்லும் மிகப்பெரும் சுரங்கத்தை (செயற்கை வாய்க்கால்) உருவாக்கினர். இந்த சுரங்கத்தின் முடிவில், பூமிக்கடியில் மிகப்பெரும் நீர் சேமிப்பு தொட்டிகளை கட்டினர்.

இந்த தொட்டிகள் 6 கால்பந்து மைதானம் அளவு கொண்டது. சுரங்கத்தின் வழியாக வரும் மழை நீர், சேமிப்பு தொட்டியில் வந்து சேருகிறது. பின்னர் இந்த சேமிப்பு தொட்டியில் இருக்கும் நீர், இராட்சத குழாய்கள் மூலம் பம்பிங் செய்யப்பட்டு அதன் அருகில் உள்ள எடவா ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. சேமிப்பு தொட்டிகளில் இருந்து ஒரு நிமிடத்திற்கு 7 ஆயிரம் கன அடி நீரை ஆற்றில் வெளியேற்றுகிறார்கள்.

இந்த திட்டத்தின் மூலம் தற்போது மழை வெள்ள பாதிப்பில் இருந்து டோக்கியோ நகரம் முழுமையாக தன்னை காத்துக் கொள்கிறது. வெள்ள பாதிப்பில் இருந்து தப்பித்தல் மற்றும் மழை நீரை முழுவதுமாக சேகரித்தல் என ஒரே கல்லில் இரண்டு மாங்காயை இந்த திட்டத்தின் மூலம் செய்து வெற்றி பெற்று இருக்கிறது ஜப்பான்.

இந்த திட்டம் 1992ஆம் ஆண்டு தொடங்கி 2006 ஆம் ஆண்டு செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. அதற்காக செலவான தொகை இந்திய மதிப்பில் ரூ.15 ஆயிரம் கோடி ஆகும். மழை வெள்ளத்தில் இருந்து பூமிக்கடியில் கட்டப்பட்ட சேமிப்பு தொட்டி தங்களை காப்பதால் ஜப்பான் மக்கள் அதனை பூமிக்கடியில் ஒரு கோவில் என்றுதான் சொல்கின்றனர். ஜப்பானின் இந்த தொழில்நுட்பத்தை அமெரிக்கா உட்பட பல நாடுகளும் பின்பற்றி வருகின்றன. (நி)

# தடுப்பூசி போடாதவர்கள் தனிமைப்படுத்தப்படுவர்

## ஆஸ்திரியா அரசு தீர்மானம்

(ஆஸ்திரியா)

ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில், கொரோனா தடுப்பூசி போடாதவர்களை தனிமைப்படுத்த அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுமார் ஒரு கோடி மக்கள் தொகை உள்ள ஆஸ்திரியாவில், 65 சதவிகிதமானோர் மட்டுமே இதுவரை தடுப்பூசி செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்து வருகின்றது.

எனவே தடுப்பூசி போடாதவர்களிடம் இருந்து தொற்று பரவுவதை தடுப்பதற்காக அவர்களை தனிமைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 12 வயதிற்கு மேற்பட்டவர்களில் தடுப்பூசி போடாதவர்கள் அல்லது தாங்கள் அண்மையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களை காட்ட முடியாதவர்கள் அத்தியாவசிய காரணங்கள் இன்றி வீடுகளை விட்டு வெளியேற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பதற்றங்களுக்கு மத்தியில் சந்தித்த அமெரிக்க- சீன தலைவர்கள்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாய்வான் விவகாரத்தில் இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

பொருளாதார வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே இணக்கமான உறவு இல்லை. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இரு தரப்பிலும் மோதல் போக்கு நிலவி வருகிறது.

வர்த்தகப் போர், கொரோனா பரவல் விவகாரம் என தொடர்ந்த மோதல் போக்கு தற்போது தாய்வானுக்கு சீனா போர் விமானங்களை அனுப்பிய விவகாரம் என பல்வேறு பிரச்சினைகளால் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவில் முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, இரு நாட்டு உயர் அதிகாரிகளின் ஏற்பாட்டில் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் சீன ஜனாதிபதிக்கும் இடையில் இந்த ஆண்டுக்குள் காணொளி ஊடாக பேசுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்கஜனாதிபதியை காணொளி ஊடாக சீன ஜனாதிபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அப்போது இருதரப்பு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர் 3 நாட்களில் விடுதலை



(வோஷிங்டன்)

மியன்மார் இராணுவத்திற்கு எதிராக செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அமெரிக்க ஊடகவியலாளர் டேனி ஃபென்ஸ்டர், தண்டனை விதிக்கப்பட்ட மூன்றே நாட்களில் விடுதலை செய்யப்பட்டார்.

ஃபென்ஸ்டர், குடியேற்றச் சட்டத்தை மீறியதற்காகவும் சட்டவிரோதமான தொடர்பு மற்றும் மியன்மார் இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பை ஊக்கு வித்ததற்காகவும் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

அத்துடன் அவர் மீது தேசத்துரோகம் மற்றும் பயங்கரவாதம் ஆகிய இரண்டு கூடுதல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. கடந்த 12 ஆம் திகதி அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில் மியன்மாரில் இருக்கும் முன்னாள் அமெரிக்க தூதர் பில் ரிச்சர்ட்சன், ஊடகவியலாளர் டேனி ஃபென்ஸ்டரை விடுவிப்பது குறித்து இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

இதில் டேனி ஃபென்ஸ்டரை விடுதலை செய்ய மியன்மார் இராணுவ அரசாங்கம் ஒப்புக் கொண்டது. இதன்படி சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 3 நாட்களுக்கு பிறகு டேனி ஃபென்ஸ்டர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

மேலும், ஃபென்ஸ்டர், அமெரிக்கா செல்வதற்கும் மியன்மார் இராணுவ அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது முதல் அங்கு ஊடக சுதந்திரம் பறிக்கப்பட்டு ஊடகத்தினர் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

17.11.2021
கார்த்திகை 01, புதன்கிழமை
திரயோதசி முற்பகல் 11.20 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 12.25 மணிவரை
சுபநேரம் 4.38-6.08 மணிவரை
இராகுகாலம் 12.08-1.38 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தரம், அத்தம்
ஐயப்பன் விரதாரம்பம்

வளவன்

**மேஷம்**
பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு.

**ரிஷபம்**
சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறை வேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்**
சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி**
கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, முயற்சிகளில் சிறு தடை தாமதம் ஏற்படலாம்.

**துலாம்**
உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு**
கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் கூடும், நெடுநாளைய கனவுகள் நனவாகும், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், பிறர் உதவியுண்டு.

**மகரம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**
இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கை.

## கொவிட்டில் இருந்து மீண்டவர்களிடையே

# நீரிழிவு நோய் தீவிரம்

## மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மீண்டு வந்தவர்களிடையே நீரிழிவு நோய் தீவிரமடைதல் அதிகரித்து வருவதாக இலங்கை மருத்துவ சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.**

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த சங்கத்தின் பிரதித் தலைவர் விசேட வைத்திய நிபுணர் மலிந்த சுமண திலக்க, கடந்த காலங்களில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு தற்போது பாதிப்புக்கள் ஏற்படுவதை பரந்தளவில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதில் பிரதானமானது நீரிழிவு நோயை தீவிரமடையச் செய்வதாகும்.

ஏனைய அறிகுறிகளுக்கு அப்பால் நீரிழிவு ஏற்படும் வீதம் சிலரிடம் அதிகரித்து வருகிறது.

சில நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய்வுகளுக்கமைய சுமார் 15 வீதமானோருக்கு இவ்வாறு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளமையை இனங்காணக் கூடியதாகவுள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்கு உள்ளாக முன்னர் நீரிழிவு நோய் இல்லாதவர்களுக்கு, கொரோனாத் தொற்றின் பின் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளமை ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மருத்துவர் தெரிவித்தார். (நி)

# தலைவர் பதவிக்கு தகுதியற்றவர் ஞானசார தேரர்

## ஆளும் தரப்பிற்குள் இருந்து எழுந்த எதிர்ப்பு

(கொழும்பு)

ஞானசார தேரரை குழு ஒன்றின் தலைவராக நியமித்தமை முற்றிலும் முட்டாள்தனமான செயல் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை எட்டம்பிட்டிய பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை ஞானசார தேரர் மீது தவறுகள் இருக்கலாம், சில உண்மைகளும் இருக்கலாம். இருப்பினும் அந்த தவறுகளுடன் அவர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டது பொருத்தமற்றது எனவும் டிலான் சுட்டிக்காட்டினார். (நி)


# 1 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23
12
1944

மறைவு
28
11
2020

அமரர்
## சரவணை கந்தசாமி (சாமியார்)
(தயா மரக்காலை உரிமையாளர்)

அனைவரையும் உன்
சிரிப்பினால் வசப்படுத்தினாய்
வாழ்ந்தது போதுமென்று
வாழ்க்கையை முடித்து
வானுலகு சென்றாயோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
(8637)
துயருறும்
குடும்பத்தினர்



யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்த் துறையின் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும், மொழிக்கும் தொண்டாற்றிய ஏழு புலமையாளர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டது. பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை, பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை, பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை, பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை, பண்டிதர் ம.ந. கடம்பேஸ்வரன், பண்டிதர் வீ. பரந்தாமன், பண்டிதர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு ஆகிய ஏழு புலமையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் இன்று புதன்கிழமையும் இடம்பெறவுள்ள இவ் ஆய்வு மாநாட்டில் 61 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)



உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. (படம் : மகாலிங்கம்)




"EP Academy" நிறுவனம் தொழிற்பயிற்சியுடன் கூடிய பரிமாணத்துடன் யாழ்ப்பாணத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

## யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

வட்டாரம் 2, 3 மற்றும் 7 ஆம் வட்டாரங்களிற்கான பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள சோலைவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி, தண்ணீர் வரி செலுத்தல் போன்ற சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (4-5)

## கசிப்புடன் கைதானவர் பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் துன்னாலை கிராமசேவகர் பிரிவில் உள்ள ஒரு கிராமத்தில் 2 ஆயிரம் கிலோ உள்ள ஒரு பரல் கோடாவுடனும் 1.5 லீற்றர் கசிப்புடனும் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-5-60)

## பட்ஜெட் நிறைவேற்றம்

(நெளுக்குளம்)

வவுனியா நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை அமர்வு நேற்று தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நகரசபை தவிசாளரினால் முன்வைக்கப்பட்டது.

இதன் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் எதிர்த்து வாக்களித்த நிலையில் ஏனைய 18 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (4-5-299)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் (கண்ணகியம் மன் ஆலயம்) நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆலய மண்டபத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. சமய தீட்சை பெற விரும்புவோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தீட்சையைப் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5)

## குடுவுடன் குடும்பஸ்தர் கைது

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுடை பகுதியில் குடுவுடன் குடும்பஸ்தர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-5- 104)

## நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலை நாளை திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை திருக்கார்த்திகை திருநாளில் நாவலர் உருவச் சிலை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகாசபையினால் நிறுவப்பட்ட ஆறுமுகநாவலரின் உருவச்சிலை நாளை 18ஆம் திகதி காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் நாவலர் கலாசார மண்டபத்தில் புனரமைப்புப் பணிகளும் தற்போது நடைபெறுகின்றன. (4-5-18-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 160 | 120 | 120 |
| தக்காளி | 300 | 350 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 180 | 200 | 240 | 240 |
| கரட் | 160 | 300 | 320 | 320 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 240 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 160 | 160 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 240 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | .130 | 140 |
| பயற்றங்காய் | 250 | 300 | 240 | 300 |
| லீக்ஸ் | 250 | 280 | 300 | 320 |
| பீற்றூட் | 120 | 90 | 80 | 100 |
| கறிமிளகாய் | 600 | 550 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 450 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 280 | 260 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 220 | 240 |
| வெங்காயப்பூ | -- | 360 | -- | -- |
| முள்ளங்கி | -- | 150 | 160 | 140 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 90 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 80 |

# எரிபொருள் தட்டுப்பாடு; மின்தடை ஏற்படும் ஆபத்து

## ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு டீசலுடன் வந்து கொண்டிருக்கும் கப்பல் உரிய நேரத்தில் வந்து சேரத் தவறினால் எரி பொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என ஜே.வி. பி. மத்திய குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் களிடம் பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் உள்ள ஒரேயொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதால் நாட்டில் எரிபொருள் தேவையை ஈடு செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்படும் எனவும் அத்துடன், மண்ணெண்ணெய் தட்டுப்பாடும் விரைவில் ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நெருக்கடியை அரசாங்கம் எவ்வாறு சமாளிக்கப் போகிறது? என்பதை நாட்டுக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)


## வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கக் கோரும் பிரதமர்

(கொழும்பு)

பல்வேறு துறைகளில் பல நெருக்கடிகள் இருந்தபோதும் அரசாங்கம் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது இத்னைத் தெரிவித்தார்.

வரவு- செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான முன்மொழிவுகளை நடை முறைப்படுத்திநாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்குமாறு பிரதமர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டார். (நி-5)



இலங்கை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பங்களாதேஷ் வெளிநாட்டு அமைச்சர் கலாநிதி. ஏ.கே. அப்துல் மொமனை நேற்று முன்தினம் டாக்காவில் உள்ள அரச விருந்தினர் மாளிகையில் சந்தித்தார்.


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சிவச்சந்திரன் சிவநிறோஜன்

பிறப்பு:-2002.11.25

இறப்பு:2020.11.29

2020.11.29 அன்று காலமான எமது செல்வப் புதல்வனின் 1ஆம் ஆண்டு நினைவாக 17.11.2021 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
ஆவளை, தையிட்டி,
காங்கேசன்துறை.

(8641)


## 'மொனுபிரவீர்' மருந்தை பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களுக்கு வாய் வழியாக வழங்கப்படும் 'மொனு பிரவீர்' என்ற மருந்தை இலங்கையில் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொரோனா தொழில்நுட்ப குழுவே இவ் அனுமதியை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராஜேஸ்வரி நடராஜன்

மலர்வு: 1937.03.14 உதிர்வு: 2020.11.28

திதி: 17.11.2021

ஓராண்டு ஓடி முடிந்தது
மறையவில்லை உமது நினைவுகள்
பார்போற்ற வாழ்ந்த விதம்
நேர்படவே உழைத்த திறன்
யார் இனி உம்போல் எமை அணைப்பது?
தூரவே சென்றாலும் எமைத் தாங்கிடும்
தூணாய் இருப்பீரே!
விழியோரம் உன் நினைவுத் துளிகள்
கண்ணீராய் என்றும் கரைகிறது.

அம்மா! உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை அனுதினமும் வேண்டுகிறோம்.
-குடும்பத்தினர்

29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

(8638)

021 222 0420

# பாண்டியாவின் சொகுசு கைக்கடிகாரங்களை பறிமுதல் செய்த சுங்கத்துறை



இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டியாவின் சுமார் 5 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள இரண்டு கைக்கடிகாரங்கள் மும்பை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

டுபாயில் இருந்து திரும்பியபோது மும்பை விமான நிலையத்தில் ஹர்திக் பாண்டியாவிடம் இந்த கைக்கடிகாரங்கள்பறிமுதல்செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாண்டியா இரண்டு கடிகாரங்களையும் வாங்கியமைக்கான உரிய ஆவணங்கள் அல்லது விலைப்பட்டியல் எதுவும் இல்லை என்றும் கூறுப்படுகிறது.

இந்நிலையில், இதனை மறுத்துள்ள ஹர்திக் பாண்டியா, என்னிடமிருந்து இரண்டு கைக்கடிக்காரங்கள் பறிமுதல் செய்யப்படவில்லை. 1.5 கோடி ரூபா மதிப்பிலான ஒரே ஒரு கைக்கடிகாரம் மட்டுமே என்னிடம் இருந்தது.

அதுவும், விமான நிலையத்துக்கு வந்ததும் நானே முன்வந்து சுங்கத் துறை அதிகாரிகளிடம் சென்று நான் கைக்கடிகாரம் கொண்டு வந்திருக்கும் தகவலைத் தெரிவித்தேன்.

ஆனால், சமூக ஊடகங்களில் நான் ஏதோ ஏமாற்றும் நோக்கில் கைக்கடிகாரத்தை மறைத்துக் கொண்டு வந்தது போல் தகவல் வெளியாகியிருக்கிறது.


நான் அந்தக் கைக்கடிகாரத்தை டுபாயில் வாங்கினேன். அதற்கான சுங்க வரியை எங்கு கட்டச் சொன்னாலும் அதனைக் கட்ட நான் தயாராகவே இருந்தேன்.

நான் கடிகாரத்தைப் பற்றி சொன்னவுடன் அவர்கள் என்னிடம் அதற்கான ஆவணங்களைக் கேட்டனர். நான் ஆவணங்களைக் கொடுத்துள்ளேன். அவர்கள், அதற்கான சுங்க வரி மதிப்பீட்டைச் செய்து வருகின்றனர். அவர்கள் மதிப்பிட்டு தொகையைச் சொன்னவுடன் நான் வரியைச் செலுத்தப் போகிறேன்.

நான் தேசத்தின் சட்டத்தை மதித்து நடக்கும் நபர். நான் அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளையும் மதிக்கிறேன். எனது கோரிக்கைகளுக்கு சுங்கத்துறையினர் ஒத்துழைப்பு தந்துள்ளனர்.

நானும் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறேன். நான் சட்டத்தை மீறிவிட்டதாக பரவும் தகவல்கள் பொய். அதேபோல், நான் கொண்டுவந்த கைக்கடிகாரத்தின்மதிப்பு 5 கோடி ரூபா என்பதும் தவறானது" என்று கூறி விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (4-6)

# பங்களாதேஷிற்கு எதிரான தொடர் பாகிஸ்தான் அணி அறிவிப்பு



பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும், 20பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இமாம்-உல்-ஹக், நடுத்தர துடுப்பாட்ட வரிசை வீரர் கம்ரான் குலாம், சுழற்பந்து வீச்சாளர்பிலால் ஆசிப் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹரிஸ் ரவுஃப், இம்ரான் பட், ஷாநவாஸ் தஹானி மற்றும் யாசிர் ஷா ஆகியோருக்குப் பதிலாக இந்த மூவரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாபர் அசாம் தலைமையிலான அணியில், முகமது ரிஸ்வான், அப்துல்லா ஷபிக், அபிட் அலி, அசார் அலி, பிலால் ஆசிப், ஃபஹீம் அஷ் ரஃப், ஃபவாட் அலாம், ஹசன் அலி, இமாம்-உல்-ஹக், கம்ரான் குலாம், முகமது அப்பாஸ், முகமது நவாஸ், நசீம் ஷா, நௌமான் அலி, சஜித் கான், சர்பராஸ் அகமது, சவுத் ஷகீல், ஷஹீன் அப்ரிடி, ஸாஹித் மஹ்மூத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பங்களாதேஷ் செல்லும் பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதில் முதலாவதாக இருபது-20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் போட்டி நாளை மறுதினம் 19ஆம் திகதி டாக்காவில் நடைபெறவுள்ளது. (4-6)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

Applications are hereby invited up to 30th November, 2021 from suitably qualified persons for the following post.

**POST OF MANAGEMENT ASSISTANT (SHROFF), GRADE III**

**Qualifications:**

**1)** Should have passed G.C.E(Ordinary Level) Examination in six subjects at one sitting with credit passes in
- i) Sinhala Language/ Tamil Language
- ii) English Language/ English Literature
- iii) Mathematics

**AND**

**2)** Should have Passed in all subjects at G.C.E.(Advanced Level) examination (except the Common General Paper) at one sitting. One of the subjects should be **Accountancy**.

**3)** Preference will be given to those who possess the following;
- **a.** An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.

&

- **b.** Two years of experience in the use of computer application packages

**Age:** Should be not less than 18 years and not more than 30 years of age on 30.11.2021

**Salary Scale :** U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m

**Selection** : By Written Examination and Interview

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Universities Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 9700 0009 0000 387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




**Copies of certificates in support of the Educational/Professional qualifications and experience as at the closing date of the applications must be attached to the applications.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post as Management Assistant (Shroff) on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of **the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna** on or before **30.11.2021.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
Incomplete and illegible applications and applications that are received after the closing date and without the copies of certificates will be rejected without intimation.


**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA.**

(C-3030)

# கிளிநொச்சியில் காணி அளவீடு தடுத்து நிறுத்தம்

(கண்டாவளை)

**கிளிநொச்சி நகரத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட காணி அளவீட்டு நடவடிக்கை பொது மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தப்பட்டது.**



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கே. என் 23 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த நிலையில் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணி அளவீடு செய்வதற்காக நில அளவையாளர்கள் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் குறித்த இடத்திற்கு வருகை தந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளர்கள் என பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அத்துடன் குறித்த காணி தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்று வருவதாகவும் காணி உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து காணி அளவீட்டு பணிகள் இடை நிறுத்தப்பட்டன. (4-5-315-316)

# கொரோனா, டெங்கு தொடர்பாக மன்னாரில் விசேட கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் கொரோனா நிலமை, டெங்கு கட்டுப்பாடு மற்றும் அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆராயும் அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

டெங்கு தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் எவ்வித டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படவில்லை.

எனினும் டெங்கு பரவலை கட்டுப்படுத்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனாத் தொற்று தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்ட தோடு, விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளின் போது பயணிகள் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்கும் வகையில் தமது சேவையினை பாதுகாப்பான முறையில் முன்னெடுக்க கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான விசேட பேருந்து சேவையையும், வெள்ளாங்குளத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான பேருந்து சேவையையும் உடனடியாக ஆரம்பிக்க உரிய தரப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே 2 ஆம் 3 ஆம் அலைகளுக்கு எவ்வாறு மிக துரிதமாக செயற்பட்டு மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோமோ அவ்வாறு மீளவும் சகல நடை முறைகளையும் மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. (4-5-285)

# வவுனியாவில் சோதனை நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள நிதிநிறுவனங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் சுகாதார அதிகாரிகள், இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று விசேட சோதனை நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்தனர்.


வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்துவரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் சுகாதார பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



அந்தவகையில் வவுனியாவில் அமைந்துள்ள வங்கி, மற்றும் வியாபார நிலையங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள், உணவகங்களில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுகாதார நடைமுறைகளை பேணாமை மற்றும் முகக்கவசங்கள் அணியாதவர்களின் விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (4-5-299)

# அன்புபுரம் முன்பள்ளி விசமிகளால் சேதம்



(அக்கராயன்)

கிளிநொச்சி முழங்காவில் அன்புபுரம் முன்பள்ளி விசமிகளால் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 14 ஆம் திகதி இரவு முன்பள்ளிக்குள் புகுந்த விசமிகள் முன்பள்ளியின் கற்றல் உபகரணங்கள் உட்பட முன்பள்ளிக்குரிய சொத்துகளை சேதமாக்கினர்.

இதன் காரணமாக இருபதிற்கு மேற்பட்ட சிறார்களுக்கான கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக முன்பள்ளி நிர்வாகத்தினால் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-5-350)

# பெற்றோருக்கு எதிராக அதிபரால் முறைப்பாடு

(நெளுக்குளம்)

வவுனியா பிரபல பாடசாலை ஒன்றின் அதிபரினால் வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த பாடசாலை அதிபரினால் கடந்த சனிக்கிழமை வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

பாடசாலை நேரத்தில் பாடசாலைக்குள் வந்த பெற்றோர் ஒருவர் தன் மகனுடைய வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும், ஆசிரியர்களைப் புகைப்படம் எடுத்ததாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)

# இரத்ததானம்

(நெளுக்குளம்)

வவுனியா ஜங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் ஏற்பாடு செய்யும் இரத்ததான முகாம் நாளை 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வவுனியா வைரவபுளியங்குளம் வைரவர்கோவில் வீதியில் அமைந்துள்ள விளையாட்டுக் கழக கட்டடத்தில் காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ள இரத்த தான நிகழ்வில் கழக உறுப்பினர்களுடன் ஏனைய விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களையும் கலந்துகொண்டு இரத்ததானம் வாழங்குமாறு கழகத்தின் தலைவர் மு. ஜீவன் அழைப்பு விடுத்துள்ளார். (4-5-299)

●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் யைன்ஸ் கழகம் மற்றும் மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் நகர சபை கலாசார மண்டபத்தில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது. எனவே இரத்த தானம் செய்ய குறித்த கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5)

## பிரதி அதிபருக்கும், தவிசாளருக்கும் இன்று விசாரணை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதி அதிபர் ஒருவருக்கும் பிரதேச சபையின் தவிசாளர் ஒருவருக்கும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் சி.சிறிரஞ்சனையும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேனையும் விசாரணைக்கு இன்று 17 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருவருக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-350)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

# இரண்டில் வந்தது குருபகவான்; எதிர்காலம் இனி நலமாகும்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**தனது இன்ப துன்பங்களை மனதிற்குள்ளேயே வைத்திருக்கும் மகர ராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.11.2021 முதல் தன ஸ்தானம் எனப்படுகின்ற 2 ஆம் இடத்திற்கு வருகின்றார். அதே நேரத்தில், ஏழரைச்சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கமும் இருக்கின்றது. எனவே, ஒருபுறம் உங்களுக்கு பணம் வந்தாலும், மற்றொரு புறம் உங்களுக்கு விரயங்களே அதிகரிக்கும். 2 ஆவது சுற்று சனியின் ஆதிக்கம் நடப்பவர்களுக்கு 'பொங்கு சனி' என்பதால் அதன் கடுமை கொஞ்சம் குறையும். இப்பொழுது பெயர்ச்சியாகி இருக்கும் குருபகவான் வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்தில் சஞ்சரிக்கின்றார்.

எனவே பொருளாதார பற்றாக் குறை அகலும். புதிய பாதை புலப்படும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களை குருபகவான் பார்க்கின்றார். அவரது பார்வை பதியும் இராசிகள் எல்லாம் புனிதமடையும் என்பதால், அந்த மூன்று இடங்களுக்குரிய பலன்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறும். குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் எதிர்ப்புகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும்.

பகை பாராட்டிய உறவினர்கள் இனி பாசத்தோடு பழகுவர். உடல் ஆரோக்கியத்திற்கு என்று ஒரு தொகையைச் செலவழித்து வந்த நீங்கள் இனி மருத்துவச் செலவுகள் குறைந்து மகிழ்ச்சியடையப் போகிறீர்கள். குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் இழப்புகளை ஈடு செய்ய எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வரலாம். அவர்களுக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

தீவிர முயற்சி செய்தும் இதுவரை முடியாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். என்றாலும், ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் இடையிடையே கூட்டாளிகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். இருப்பினும் நீங்கள் விழிப் புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம்(13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே சுக லாபாதிபதியான செவ்வாய் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களே வந்து சேரும். பொதுவாக சகோதர ஒற்றுமை பலப்படும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரலாம். பணிபுரியும் இடத்தில் பாராட்டும், புகழும் கூடும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும்.

**இராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் இராகு பகவான் சஞ்சரிக்கின்றார். அவர் சஞ்சரிக்கும் வீடு சுக்கிரனின் வீடாகும். இராகு சுயபலமற்ற கிரகம் என்பதால் அந்த ஸ்தானாதிபதிக்குரிய பலன்களை வழங்குவார். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பிள்ளைகளால் பெருமை வந்து சேரும் நேரமிது.

உங்கள் குணமறிந்து குழந்தைகள்




நடந்து கொள்வர். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பும் கிடைக்கும். சொத்து விற்பனையால் இலாபம் உண்டு.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

குரு உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிக மிக கவனம் தேவை.

வரவைக் காட்டிலும் செலவு கூடும். திடீர் திடீரென விரயங்கள் ஏற்பட்டு திகைக்க வைக்கும்.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

குருப்பெயர்ச்சிக் காலத்தில் 21.3.2022 இல் இராகு-கேது பெயர்ச்சியும் நிகழவிருக்கின்றது. இதுவரை 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், இப்பொழுது சுக ஸ்தானம் எனப்படும் 4 ஆம் இடத்திற்கு மாறுகின்றார். 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது இப் போது 10 ஆம் இடத்தி ற்கு வருகிறார். இதன் விளைவாக ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். மனக்கசப்பு தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு படம் வைத்துக் குரு கவசம் பாடி வழிபடுவதோடு, யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்.

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்:

முரண்பாடான கிரகங்களின் பார்வையும், சேர்க்கையும் இருக்கும் இக்காலத்தில் முன்னேற்றத் தடைகள் அதிகரிக்கும். முக்கியப் புள்ளிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. உத்தியோகத்தில் இருந்து ஒருசிலர் பணி நீக்கம் செய்யப்படுவர்.

குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் தடுமாற்றங்கள் ஏற்படும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். என்ன இருந்தாலும் இதுபோன்ற காலங்களில் யோசித்துச் செயற்படுவதே நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு தேவைக்கேற்ற பணம் தேடி வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சிறிது செலவிடுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. புதிய வேலை வாய்ப்பை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. சனிபகவான் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்)

# நாட்டில் எரிபொருள் இல்லை என்பது நிரூபணமாகி உள்ளது - திஸ்ஸ

**(கொழும்பு)**

**சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை சில நாட்களுக்கு மூடுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் பின்னணியில் நாட்டில் குறைந்தது ஒரு மாதத்துக்கு போதிய எரிபொருள் இருப்பு இல்லை என்பது நிரூபணமாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.



மசகு எண்ணெயை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை எவ்வாறு கொள்வனவு செய்வது என கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பரிவர்த்தனை நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில் தரகுப் பணம் அல்லது நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் எரிபொருளை கொள்வனவு செய்தமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் வருந்துவதாகவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-5)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகல்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஜகத் பாலசூரிய பதவி விலகியுள்ளார்.


கலாநிதி ஜகத் பாலசூரிய கடந்த ஒக்டோபர் மாதம் பதவியை இராஜினாமா செய்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

வயோதிபம் மற்றும் உடல் நலத்தை கருத்திற்கொண்டு ஏறக்குறைய ஒரு வருட சேவையை நிறைவு செய்த நிலையில் கலாநிதி ஜகத் பாலசூரிய தானாக முன்வந்து இராஜினாமா செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் கருணாசிறி ஊடகங்களுக்கு தெரிவித்தார். (நி)

# மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்த முடியாது

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.



நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை தற்போது நடத்துவதற்கு சாத்தியமில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர், தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்று அப்போது பார்ப்போம் என்றும் சவால் விடுத்தார். (நி-5)

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 'பூஸ்டர்' வழங்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு 3 ஆவதாக பைசர் "பூஸ்டர்" தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகிறது.

முதல் கட்டமாக மேல், தென் மாகாணங்கள், அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இன்று ஆரம்பமாகும். இந்நடவடிக்கை தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளையும் போட்டு 3 மாதங்கள் முடிந்தவர்கள் 3 ஆவது பைசர் தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

முதல் கட்டமாக, சுகாதாரத் துறையினர், முப்படையினர், பொலிஸார், சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை நவம்பர் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 100,000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் வழங்கப்படும். இதற்காக 14.5 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை வாங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உற்சாகம் காண்போம்

ஒரு செயலில் இறங்குகிறோம். இடையே ஏனோ தொய்வு ஏற்பட்டு விடுகிறது. மனமும் உடலும் சோர்ந்து விடுகின்றன.

செயல் நிறைவேறாமல் போய் விடுகிறது. அந்த நிலையிலும் நம்முடைய குறையை நாம் உணராமல் மற்றவர்களைக் குறை கூறுகிறோம்.

நம்மிடத்தில் உள்ள அரும்பெரும் ஆக்க சக்திகளை வெளியே கொண்டு வருவன நம்முடைய ஊக்கமும் உற்சாகமும் தான்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் நாம் இறங்கியிருக்கும் செயலினால் ஏற்படக்கூடிய சிறந்த தன்மைகளையும் பலன்களையும் சிந்திக்க வேண்டும்.

இத்தகைய தீர்க்க தரிசனம் மேலும் உற்சாகத்தைக் கொடுப்பதாக இருக்கும்.

எந்த ஒரு செயலுமே ஆரம்பத்தில் கவர்ச்சியற்றும் கசப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாகவும் சோதனைகளும் சிக்கல்களும் மிகுந்தனவாகத்தான் தோன்றும். கவர்ச்சியற்ற ஒரு ஜடப்பொருளின் மீது சக்தி வாய்ந்த ஒளி பாய்ச்சப்படுகிறது. உடனே ஆகா! அந்தச் செயல் எவ்வளவு சுவாரசியமாக ஆகிவிட்டது பார்த்தீர்களா!

ஒரு விடயத்தில் ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அதில் உள்ள நுணுக்கங்கள் நன்கு புலப்படுகின்றன. தீவிரமான சிந்தனை ஏற்படுகிறது. ஏற்படக்கூடிய சிக்கல்களை முன்கூட்டியே அறிய முடிகிறது. அவற்றை ஆரம்பத்திலேயே தலையில் தட்டித் தலை தூக்க முடியாமல் செய்ய முடிகிறது.

உற்சாகமில்லாமல் ஒரு செயலில் இறங்குவது என்பது கண்ணைக்கட்டிக்கொண்டு ஒரு பொருளைத் தேடும் மடத்தனத்தைவிட மேலான மடத்தனமாகும்.


உற்சாகத்தினால் அடையக்கூடிய பலன்கள் இன்னும் இருக்கின்றன.

புதிய வழிமுறைகள் தோன்றக்கூடும். அவற்றின் மூலம் நேரமும் வீணாகப் போகும் உழைப்பும் பொருட் செலவும் மிஞ்சும்.

வெறுப்பையும் மந்தத்தையும் நசுக்கிப் போசுக்கும் உற்சாகமானது மகிழ்ச்சியையும் திறமையையும் சேர்க்கும்.

இந்த மூன்றும் இணைந்து விட்டால் நமக்கு தோல்விகளே ஏற்படா!

**லேனா தமிழ்வாணன்**




# புள்ளிமான்

ஒரு காட்டில் ஒரு புள்ளிமான், ஒரு சிறு முயல், ஒரு நரி மூன்றும் நண்பர்களாக இருந்தன.

ஒரு சமயம் புள்ளி மானைப் பார்ப்பதற்காக, அதன் உறவினரான புள்ளிமான் ஒன்று வேறு காட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது.

அதைத் தற்செயலாகச் சிறுத்தை ஒன்று பார்த்தது. அதன் நாக்கில் நீர் ஊறியது.

உடனே அது புள்ளி மானுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து சென்று, அது எதிர்பாராத சமயத்தில், அதை அடித்து வீழ்த்தி சுவைத்துத் தின்றது.


இதை அக்காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மரங்கொத்திப் பறவை பார்த்தது. அது உடனே விரைந்து சென்று புள்ளிமானிடம் தகவல் கூறியது.

"உன்னுடைய உறவுக்காரப் புள்ளிமான் சாவதற்குக் கொஞ்ச நேரம் முன்னால்தான் உறவினர் பெயரை என்னிடம் கூறி, உன் இருப்பிடத்திற்கு எப்படிப் போக வேண்டும் என்று வழி கேட்டது.

நான் தான் சொல்லி அனுப்பினேன். ஆனால், உன்னுடைய எதிரியான அந்தச் சிறுத்தை இப்படிச்செய்யும் என்று எதிர்பார்க்கவில்லை.

அது உனக்கு மட்டுமல்ல, இங்குள்ள ஏனைய சின்னச் சின்ன விலங்குகளுக்கும் கூட தீமையே செய்து வருகிறது.

அதை எப்படியாவது ஒழித்துக் கட்டும் வேலையைப் பார். இல்லாவிட்டால் உன் குடும்பத்தைக் கூட என்றாவது ஒருநாள் கொன்று தின்று விடும்!" என்று சொல்லி விட்டுப் பறந்தது.



மான் பெரிதும் கவலைப்பட்டுப் போயிற்று. அப்போது அதைப் பார்க்க முயலும், நரியும் வந்தது. மானின் சோகத்தைக் கண்டு, "என்ன நடந்தது?" என்று கேட்டன.

மான், மரங்கொத்திப் பறவை கூறியதைக் கவலையுடன் கூறியது.

"அவ்வளவு பெரிய சிறுத்தையை நம்மால் எப்படித் தீர்த்துக் கட்ட முடியும்?" என்று கேட்டது மான்.

நரி பலத்த யோசனையில் ஆழ்ந்தது. பிறகு "நான் சொல்கிறபடி செய். நாம் அனைவரும் நலமாக இருக்கலாம். அந்தச் சிறுத்தையையும் ஒழித்துக் கட்டலாம்!" என்று கூறியது.

பின், மானின் காதோடு காதாக அந்த ரகசியத்தைக் கூறியது. மான் மகிழ்ந்தது. மறுநாள் சிறுத்தையை நரி சந்தித்தது.

"சிறுத்தை அவர்களே நலமா?" என்று நலம் விசாரித்தது.

"நலத்துக்கு ஒரு குறையும் இல்லை. என்ன இந்தப் பக்கம்?"" என்று விசாரித்தது.

"காதில் கேட்ட ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். உனக்குப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது!" என்றது நரி.


(தொடரும்)

# மகாபாரதம்

உண்மையில் ஆகாயத்தில் வானலியின் தோற்றமும் இல்லை. மின்மினிப் பூச்சிகளிடம் நெருப்பும் இல்லை. எதையும் எண்ணிப் பார்த்து உண்மையைக் காண வேண்டும். அரசன் தன் மக்களில் யாரையும் கொல்ல முடியும். இது பெரிய காரியம் அன்று.

உண்மை காண்பது தான் பெரிய செயல். உண்மையைக் கண்டு பிடி. பாவிகளான மற்ற அமைச்சர்களின் பேச்சைக் கேட்காதே.

பழுது எண்ணும் மந்திரிகளின் பேச்சைக் கேட்டால் உனக்கு அழிவு நிச்சயம் ஏற்படும். மேலான நரியை பகைக்காதே" என்று கூறிற்று.




அரசப் புலி யோசித்துப் பார்த்தது. நரியின் மீது பழி சுமத்துதல் தவறு என உணர்ந்து கொண்டது. நரியை அணைத்துக் கொண்டது.

நீதி நெறி உணர்ந்த நரிக்கு மான உணர்வு மிகுந்தது. பழிக்குப் பின் இனியும் உயிர் வாழ விரும்பவில்லை. உண்ணா நோன்பு இருந்து உயிர் துறக்க விருப்பம் கொண்டது. ஆனால் புலி நட்பு முறையில் கண்ணீர்பெருக்கி நரியை அவ்வாறு செய்யாமல் தடுக்க முயன்றது.

ஆனால் நரியோ தான் கொண்ட கொள்கையில் உறுதியாய் இருந்தது. அது புலியை நோக்கி.. "ஆரம் பத்தில் நீ என்னை நன்கு மதித்தாய்.

பிறகு பிறரின் சொல் கேட்டுப் பழி சுமத்தி அவமானப் படுத்தினாய். பதவியிலிருந்து நீக்கினாய். மீண்டும் பதவி பெற்றால் என் மீது உனக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்?

நானும் எப்படி பழையபடி நம்பிக்கை கொள்ளமுடியும்? முதலில் பாராட்டி பதவியில் அமர்த்திய பின் குறை கண்டு பழி சுமத்துதல் அரச நீதி ஆகாது.

இனிமேல் நீயும் என்னிடம் பழையபடி இருக்க முடியாது. நானும் மனம் கலந்து பழக முடியாது. நண்பர்களும் ஒரு மாதிரியாகப் பார்ப்பார்கள்.

பிளவு ஏற்பட்ட பிறகு ஒன்று கூடுதல் கடினம்" என்பன போன்ற நீதிகளைக் கூறியபின் புலியிடம் விடை பெற்றுச் சென்றது நரி. ஆயினும் மன நிம்மதியிழந்து, உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்து சுவர்க்கம் அடைந்தது" என்று கூறினார் பீஷ்மர்.

**ஒட்டகத்தின் கதை**

சோம்பல் அழிவுக்குக் காரணமாகும் என்பதை உணர்த்த பீஷ்மர் சொன்ன ஒட்டகத்தின் கதை.

ஒட்டகத்தின்கதையை அனைவரும் அறிவர். அந்த ஒட்டகம் போல யாரும் சோம்பலாக இருக்கக்கூடாது.

முற்பிறப்பைப் பற்றிய ஞானம் உள்ள ஒரு ஒட்டகம் காட்டில் தவம் மேற்கொண்டிருந்தது.

அந்தத் தவத்தின் பெருமையை உணர்த்த பிரம்ம தேவர் ஒட்டகத்திற்குக் காட்சியளித்தார். "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். (தொடரும்)

இறந்து போனவனின் செருப்புகளுக்குக் காத்திருப்பவன் வெறுங் கால்களுடனே நடக்க வேண்டி வரும். – டேனிஷ் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செங்குருதிக் கோடுகளாய் மாறுகின்ற வடக்கின் வெள்ளைக் கோடுகள்

கிளிநொச்சி ஏ9 வீதியில் வெள்ளைக் கோட்டுப் பகுதியால் வீதியைக் கடக்க முற்பட்ட மாணவியை ஒன்றன்பின் ஒன்றாக வந்த வாகனங்கள் மோதித் தள்ளி கொன்றுவிட்ட துயரச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வெளியாகிப் பலரது இதயங்களையும் கருக்கி விட்டது.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த செல்வி திருவாசகம் மதுசாளினி என்ற மாணவி க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து, உயர்தரத்தில் கற்பதற்காக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அனுமதி பெறுவதற்கு வந்தபோது இந்த நெட்டூரம் நடந்து முடிந்தது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த மாணவி மதுசாளினி உயர்தரத்தில் படித்து பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் என்ற கனவைச் சுமந்து வந்தபோது, நம் வாகனச் சாரதிகள் வழங்கிய பரிசு என்ன என்பதை நீங்கள் யாபேரும் அறிவீர்கள்.

அந்தோ! கொடுமை. பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கென ஒதுக்கப்பட்ட பகுதியால் சென்ற மாணவியை வாகனங்கள் மோதித் தள்ளின என்றால்,

சாரதிகளின் பொறுப்பும் அவதானமும் எவ்வாறாக இருக்கிறது என்பதை ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

ஏ9 வீதியால் பயணிக்கக்கூடிய வாகன சாரதிகள் அப்பெரு வீதியின் வளைவுகள் – திருப்பங்கள் – பாடசாலை அமைந்துள்ள இடங்கள் – பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கான வெள்ளைக்கோட்டுப் பகுதிகள் என்பவற்றை நிச்சயம் அறிந்திருப்பர். அறிந்திருக்க வேண்டும்.

ஆனால் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அண்மையாக உள்ள வெள்ளைக் கோட்டுப் பகுதியில் வைத்து இரண்டு மாணவிகளை மோதி, ஒரு மாணவியை கொன்றும் மற்றைய மாணவியைப் படுகாயப்படுத்தியும்விட்ட சம்பந்தப்பட்ட சாரதிகளின் மனநிலை எத்துணை இரக்கமற்றது. கொடுமையானது என்பதை ஊகிக்க முடியும்.

இவ்வாறான சம்பவங்களைத் தயவுசெய்து எவரும் விபத்தாகப் பார்த்துவிடாதீர்கள்.

இதுதிட்டமிட்ட கொலை. அதிலும் இரக்க மற்ற ஈனத்தனம் உடைய சாரதிகளின் வெறியாட்டம்.

இந்த வெறித்தனம் திருநெல்வேலி பலாலி வீதியில், பள்ளி சென்று வீடு திரும்பிய பாலகனை மோதித் தள்ளி கொன்றுவிட்ட கொடூரத்தோடு நின்றுபோகுமென்றால், இல்லவே இல்லை.

ஆம், இப்போது ஓர் ஏழைக் குடும்பத்தின் மாணவி கொடூரச் சாரதிகளின் வெறியாட்டச் சாரத்தியத்துக்குப் பலியாகியுள்ளார்.

இந்தக் கொடூரங்கள் மரத்தின் பின்னால் மறைந்து நின்று வாகன சாரதிகளிடம் இலஞ்சம் பெறும் பொலிஸார் இருக்கும்வரை ஓயப் போவதுமில்லை.

ஆம், வடக்கில் பொலிஸ் தரப்பில் தாண்டவமாடும் இலஞ்ச ஊழல்; குற்றவாளிகளைக் காப்பாற்றுகிறது. பிழையான சாரத்தியத்தை ஊக்குவிக்கிறது. சண்டித்தனச் சாரதிகளுக்கும் சாராயம் குடித்துவிட்டு வாகனம் ஓட்டுகின்றவர்களுக்கும் சப்போட் ஆக இருக்கிறது.

இதனால் எங்கள் வடக்கின் வெள்ளைக் கோடுகள் எந்த நேரத்திலும் செங்குருதிக் கோடுகளாக மாறும் என்பதுதான் தலைவிதியாயிற்று.

ஆயினும் எம்மருமை உறவுகளே! அந்த ஏழை மாணவியின் குடும்பத்துக்கு உதவுவது தான் நாம் செய்யவல்ல புண்ணியம்.

# மாவீரர் நினைவு நாளை மாற்றியமைப்பது துயிலும் இல்லங்களை தகர்ப்பதற்கு சமமாகும்

## முடிவை பரிசீலிக்குமாறு ஆயர் மன்றத்திடம் ஐங்கரநேசன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவம் மாவீரர் துயிலும் இல்லங்களை இருந்த சுவடே தெரியாமல் அழித்தொழித்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை, அதனூடாகப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை மக்கள் மனங்களில் பதியவைக்கும் வரலாற்றுக் கடத்திகளாக இவை அமைந்துவிடும் என்பதே இதற்கான காரணமாகும். இதேபோன்றே, மாவீரர் நினைவு நாளை மாற்றியமைப்பதும், எல்லோருக்குமான பொதுவான நினைவு நராளாகக் கடைப்பிடிப்பதும் மக்கள் மனங்களில் எஞ்சியுள்ள நினைவுகளையும் துடைத்தழிக்கும் வரலாற்றுத் திரிபுபடுத்தல்களாக அமைந்துவிடும்.

அந்தவகையில் மாவீரர் நாளை ஆயர் மன்றம் மாற்றியமைப்பது படையினர் மாவீரர் துயிலுமில்லங்களைத் தகர்த்தமைக்கு ஒப்பானதாகிவிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் போரில் ஈடுபட்டு இறந்தவர்களின் நினைவாகவும் போரால் இறந்த பொது மக்களின் நினைவாகவும் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தின் 3 ஆவது சனிக்கிழமையைப் பொது நினைவு நாளாகக் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ் மக்கள் போராடி மடிந்த வீரமறவர்களின் நினைவாக நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளையும் போரால் இறந்த பொது மக்களின் நினைவாகவுமே 18 இல் முள்ளிவாய்க்கால் தினத்தையும் படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கடைப்பிடித்துவரும் நிலையில் ஆயர் மன்றத்திடமிருந்து இக்கோரிக்கை எழுந்துள்ளது.

இத்திகதிகள் எழுந்தமானமான தெரிவுகள் அல்ல. ஒவ்வொரு திகதியும் தன்னகத்தே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான வரலாறுகளைப் பொதிந்து வைத்திருக்கிறது. எனவே, ஆயர் மன்றம் தங்களது இந்த முடிவை மீள்பரிசீலனை செய்து, தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியினர் இறந்த தங்கள் தலைவர்களின் நினைவுகளைக் கார்த்திகை வீரர்கள் தினமாக வெளிப்படையாகவே கடைப்பிடிப்பதைப்போன்று தமிழ் மக்களும் போரில் இறந்த போராளிகளினதும் பொதுமக்களினதும் நினைவு நாட்களைக் கடைப்பிடிக்கும் உரித்துடையவர்கள் என்பதை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# தமிழர்களை இல்லாதொழிப்பதில் அரசாங்கம் மும்முரம்

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கண்டாவளை)

இலங்கை அரசானது தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணிகளை அபகரிப்பதிலும் தமிழர்களை இல்லாது அழிப்பதற்கும் தொடர்ந்து முயற்சிகளை செய்து வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் யுத்தத்திற்கு பின்னர் இலங்கை அரசானது ஒரு பகற் கொள்ளை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்கி அவர்களின் காணி களைப் பறிப்பதிலும் அவர்களுக்கான உரிமைகளை தடுப்பதிலும் அரசும் அரச படைகளும் குறிப்பாக பொலிஸாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை அரசானது வடக்கு, கிழக்கு தமிழர் வாழும் பகுதிகளில் அவர்களுடைய பூர்வீக காணிகளைப் பறிப்பதிலும் தமிழர்களை இல்லாதொழிப்பதற்கும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகள் இவ்வாறான விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-5-315)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** அரசர் கேணி, இத்தாவில் கச்சார்வெளி, முகமாலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."**

**-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

'மக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம் பக்தர்கள், முமுட்சுக்கள், முக்தர்கள், நித்தியர்கள்.

'நாரதர் போன்றோர் நித்தியர்கள். இவர்கள் மக்களின் நன்மைக்காக, அவர்களுக்கு போதிப்பதற்காக உலகில் வாழ்கிறார்கள்.

'பத்தர்கள் உலகியலில் கட்டுண்டவர்கள் பகவானை மறந்தவர்கள் மறந்தும்கூட அவரை நினைக்காதவர்கள்.

'முமுட்சுக்கள் முக்தியை நாடுபவர்கள். ஆனால் இவர்களில் ஒருசிலர் முக்தர் ஆகின்றனர், சிலரால் முடிவதில்லை.

'முக்தர்கள்: சாதுக்களைப்போல், மகான்களைப்போல். இவர்கள் காமினீ காஞ்சன ஆசையால் கட்டுப்படாதவர்கள். இவர்களின் மனத்தில் உலகியல் இல்லை. இவர்கள் எப்போதும் எம்பெருமானின் திருவடித் தாமரைகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். (தொடரும்)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பல்பொருள் வாணிபக் கடைகள் (நாவாந்துறை) ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல்-2022 (01.01.2022-31.12.2022)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2022 ம் திகதி முதல் 31.12.2022 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம்** - **ரூபா 1,000.00**
**கேள்விப் படிவம் விநியோகித்தல்** - **16.11.2021 - 30.11.2021 .( மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)**
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்** - **01.12.2021 மு.ப 10.00 மணி வரை**
**கேள்வி திறத்தல்** - **01.12.2021 10.00 மணிக்கு**

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 01.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

### இறைச்சிக்கடை , பல்பொருள் வாணிபம் குத்தகை - 2022

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம் | கடை.இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 213,100.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 49,629.87 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 177,140.44 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 262,725.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 172,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 83,301.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 826,956.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 100,500.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 970,600.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 982,400.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 154,691.00 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 311,000.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 417,819.00 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 350,550.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 360,450.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 607,340.70 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 681,074.45 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 548,899.50 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 160,000.00 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 380,000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 794,091.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 379,691.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 285,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 262,000.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 438,050.00 |
| 26 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 63,206.67 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 632,950.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 652,112.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,700.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 529,692.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 525,100.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 500,175.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 364,910.00 |
| 34 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 350,728.00 |
| 35 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.04 | 5,000.00 | 305,414.55 |
| 36 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 271,479.60 |
| 37 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 190,884.10 |
| 38 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 169802.02 |
| 39 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 188,593.49 |
| 40 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 56,332.02 |
| 41 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 9792.35 |

### துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தைக் குத்தகை - 2022

| இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள்,சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,865,455.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 6,001,637.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 5,500,500.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 7,536,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 606,000.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 76,175.75 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 360,000.00 |
| 8 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 166,392.00 |
| 9 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 217,006.00 |
| 10 | யாழ். பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 425,612.00 |
| 11 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 261,819.00 |
| 12 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 11,461.19 |
| 13 | நீதிமன்ற. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 261,819.00 |

### விளம்பர ஒலிபரப்புச்சேவைகள் குத்தகைக்கு 2022.01.01. - 2024.12.31 (மூன்றுவருடம்)

| இல | ஒலிபரப்பு விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைமுறி விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 01 | நவீன சந்தைகட்டிடத்தொகுதி மேல்மாடி | MC/N.M.B/F-08/B.01/2021 | 1.5 மில்லியன் (1,500,000.00) | 30,000.00 | 03.01.2022 |
| 02 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | MC/S.M/F-08/B.02/2021 | 0.5 மில்லியன் (500,000.00) | 10,000.00 | 03.01.2022 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாநகர சபை , யாழ்ப்பாணம்.**

(C-3023)

## சஜித் கொத்தணி...

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது,

"மக்களை வீதியில் இறக்கி, சீரற்ற கால நிலையில் அவர்களை வதைப்படுத்தி அரசியல் நடத்தும் நேரம் இதுவல்ல. நாட்டில் கொரோனா இருப்பது எதிரணி உறுப்பினர்களுக்குத் தெரியாதா? அவர்களுக்குத் தெளிவில்லை என்பதுதான் அவர்களின் நடத்தைமூலம் அறிய முடிகின்றது.

ஆரம்பத்தில் ஆடைத் தொழிற்சாலை கொத்தணி ஏற்பட்டது. அதன்பின்னர் புத்தாண்டு கொத்தணி உருவானது. ஆசிரியர்களின் போராட்டத்தாலும் கொத்தணி பரவியது.

சஜித்தின் போராட்டத்தில் சஜித் கொத்தணியும் உருவாகும் அபாயம் உள்ளது. எமது அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. தேர்தல் ஊடாக அரசை வீழ்த்துங்கள். மாறாக மக்களைப் பணயம்வைக்க வேண்டாம்" என்றார். (ம-3)

## கோயிலுக்கு...

குடும்பப் பெண்ணொருவரது தங்கச் சங்கிலியை திருடர்கள் இருவர் அறுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுழிபுரம் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் சித்தன்கேணி சிவன் ஆலயத்திற்கு வந்து, துவிச்சக்கரவண்டியை நிறுத்தும்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் குறித்த குடும்பப் பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது 3 3/4 பவுண் சங்கிலியில் அரைவாசி திருடனின் கைகளிலும் மிகுதி அந்த பெண்மணியின் கைகளிலும் அகப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,17,104)

## பாராளுமன்றத்...

னார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எதுவும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா? பிங்கிரிகமயிலிருந்து நான் பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் 21 பொலிஸ் சோதனைச் சாவடிகளை கடந்து வரவேண்டியிருந்தது. இதில் 10 இடங்களில் எனது வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தார்கள் எனவும் தெரிவித்தார்.

பிங்கிரியவிலிருந்து பாராளுமன்றத்துக்கு வரும்வரையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஏன் இத்தனை சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளார்? பாராளுமன்றம் மீது எவரும் குண்டுத் தாக்குதல்கள் நடத்த உள்ளார்களா? இல்லை என்றால் பிரபாகரன் மீண்டும் வந்து குண்டுத் தாக்குதல் நடத்த உள்ளாரா? எதற்காக இத்தனை சோதனைச் சாவடிகள்? எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார். (ம-3)

## 18 மரணம்...

18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,034 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் 720 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## 32 பேருக்கு...

நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 163 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## இது ஆரம்பம்...

கொழும்பு மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்னாலிருந்து ஆரம்பமாகிய பேரணியில் கலந்துகொண்டபோதே இந்த சூளுரையினை விடுத்துள்ளார்.

விவசாயம் அழிப்பு, பொருட்களின் விலையேற்றம், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டம் கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸ் உள்ளிட்ட அரச படைகளின் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் பெருந்திரளான மக்கள் கொழும்பு நோக்கி வந்து நிவாரணம் வேண்டும், வாழ்க்கைச்சுமை குறைக்கப்பட வேண்டும், நாட்டு வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், உரப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பினர்.

## கண்ணீர் அஞ்சலி



சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்
யாழ். மாவட்டத்தின் படை அத்தியட்சகர்
**கோ. சுப்பிரமணியம்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்,
வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்)
அவர்களின் அன்புத் தந்தை

**வயிரமுத்து**
**கோவிந்தபிள்ளை**

(சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்
யாழ்.மாவட்ட ஆலோசகர்)

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 1933.04.09
உதிர்வு : 2021.11.16

(8652)

St John Sri Lanka

மாவட்ட ஆணையாளர், உதவி மாவட்ட ஆணையாளர்,
உத்தியோகத்தர்களும் அங்கத்தவர்களும்
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் - யாழ்.மாவட்டம்.

இந்தப் போராட்டத்தால் கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## திடீரென...

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில இடங்களில், அந்த ஆதரவாளர்கள் பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு அருகில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இன்னும் சில இடங்களில் ஆதரவாளர்கள், வீதியில் படுத்து புரண்டு எதிர்ப்பைத் தெரிவித்தனர். சுகாதார வழி முறைகளை பின்பற்றியிருக்கும் தங்களால், கொழும்புக்கு ஏன் செல்ல முடியாது?, அதற்கான சட்ட ஏற்பாடுகள் என்ன? உங்களுடைய சம்பள உயர்வுக்காகவும் போராட்டம் செய்வதற்காகத்தான், கொழும்புக்குச் செல்கின்றோம் என பொலிஸாரிடம் பேருந்துகளில் வந்தோர் தெரிவித்தனர்.

எனினும், மேலிடத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புரைக்கு அமையவே தங்களால் செயற்பட முடியுமெனத் தெரிவித்த பொலிஸார், அவ்வாறான பேருந்துகளை அவ்விடத்தில் இருந்தே திருப்பியனுப்பிவிட்டனர். இதனால் கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்விடத்திலேயே தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால், சில இடங்களில் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. (ம-3)

## மாகாண சபை...

விக்கையில்,

மாகாண சபைக்குள் உள்ள நிதிகளை சரியான முறையில் செலவழிப்பதில்லை. மத்திய அரசாங்கம், மாகாண சபை, ஆளுநர் அலுவலகம் என்பன இணைந்து நிதி சம்பந்தமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இருக்கும் நிதிகளை சரியான முறையில் செலவு செய்ய திட்டமிட்டு வருகின்றோம். அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சரியான முறையில் வேலை செய்ய வேண்டும். ஊழல் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-3,250)


தன நிதானய
திகதி - 2021.11.16
சீட்டிழுப்பு இலக்கம் - 618
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 25 41 74 75
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 16.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2883
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 18 36 56 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/11/16
சீட்டிழுப்பு இலக்கம் 4588
ஆங்கில எழுத்து: 0
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 9 8 0 2 0
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/16
சீட்டிழுப்பு இலக்கம் 1634
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 12 22 31 33
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 16/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0936
வெற்றி எழுத்து Q
சுப்பர் இலக்க 24
வெற்றி இலக்கங்கள் 04 35 66 72

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1391
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,708,860
வெற்றி இலக்கங்கள்: 04 06 43 71
ஆங்கில எழுத்து: X
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3726
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,644,820
வெற்றி இலக்கங்கள்: 26 45 54 71
ஆங்கில எழுத்து: M
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1565
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 16.11.2021
தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: P 14 23 27 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 70,396,556/=
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,175,622/=
திகதி 16.11.2021
வெற்றி வாரம் 3277
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 27 44 50 59
தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,975,860/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம்: 766
வர்ணம்: இளஞ்சிவப்பு
திகதி: 16. 11. 2021
செவ்வாய்க்கிழமை
E 14 18 34 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,459,000/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8650)


## பொலிஸாருக்கு...

எனக்கூறி பொன்னாலை பகுதியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் அடித்துடைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று மாலை 6.30 மணியளவில், கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் கைதிற்கான தகவலை வழங்கியதாக தெரிவித்து அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டு வீசப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் நொறுக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்டதோடு சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,104)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு மேசன் மற்றும் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு (8646)
077 558 8835
076 200 4827

## காணிகள் விற்பனைக்கு

பளை A9 வீதியிலிருந்து 125 மீற்றர் தூரத்தில் முல்லையடியில் 3 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

மேலும் என்னிடம் 10 Ac~100Ac இற்கு இடையில் வெறும் காணிகளும் தென்னங்காணிகளும் நன்னீர் மீன்வளர்ப்புக்கான காணிகளும் விற்பனைக்கு உண்டு. (8643)

077 653 1980

## போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்

◦ புகையிரத நிலைய அதிபர்
◦ கல்வியியலாளர் சேவை

வியாழன் (18/11) சனி (20/11) காலை 9.00-பி.ப 3.00 மணி வரை நாள் ஒன்றுக்கு 400/= (8649)

தவசேகர் வளவாளர் குழு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கி அருகில்)


## ஆர்...

அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மக்களின் பங்கேற்புடன் போராட்டம் நடைபெற்றது. என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)


## பணியாட்கள் தேவை

வல்லையில் புதிதாக அமைந்துள்ள
VILLAGE HOTEL AND INDIAN RESTAURANT இற்கு
❖ Manager ❖ Waiter
ஆகிய இரு பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
நேர்முகத் தேர்வு 20.11.2021 காலை 10.00 மணிக்கு நேரில் வரவும். (8639)

தொடர்புகளுக்கு - 076 830 3931

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் (8651)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8645)

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)

## காணிகள் தேவை

கொடிகாமத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் A9 வீதியில் தென்னங் காணிகள் அல்லது வெறும் காணிகள் உடன் விலைக்குத் தேவை. (8644)

074 037 1960

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் புடைவைக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (இருபாலாரும்)

வயதெல்லை : 18 - 30
தகைமை : O/L (8636)

074 031 3051
074 014 3051

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2919)

0768226240 DHL


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை செல்வவிநாயகம்

(ஓய்வுபெற்ற அதிபர் – உரும்பிராய் இந்துக் கல்லூரி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கனடாவில் தற்போது வசித்தவருமான கணபதிப்பிள்ளை செல்வவிநாயகம் அவர்கள் கடந்த 13.11.2021 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் வாசுகி (கனடா), தமயந்தி (கனடா), பாலமுரளி (கனடா), விஜயா (கனடா), ஜெயகாந்தன் (கனடா), காலஞ்சென்ற துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சதானந்தன் (கனடா), ரவிகரன் (கனடா), சாந்தி (கனடா), கிருஷ்னானந்தன் (கனடா), பிரியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசம்மா, சபாநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி) மற்றும் பரமேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபஞ்சனின் பெரியப்பாவும் சுபாங்கி, பெனாட்சன், சிவாத்மன், சனகன், நந்திதா, சுபீட்சா, சேனுகா, சாணக்கியன், சாகித்தியன், அபிசேகன், விபூசனன், நித்திகா ஆகியோரின் பேரனும் நடராஜா, பத்மினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் இன்று (17.11.2021) புதன்கிழமை நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-3034)

தகவல்:- சகோதரிகள் மற்றும் பெறாமகன் (பிரபஞ்சன்)


YMCA Jaffna
YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION
No.109, Kandy Road Jaffna.

Azadi Ka Amrit Mahotsav

CONSULATE GENERAL OF INDIA
Jaffna


## BLOOD DONATION CAMPAIGN

SHARE BLOOD - SHARE LIFE

Date : 18th November 2021
Time : 09.00am - 03.00pm
Venue : Main Hall, YMCA Jaffna

JAFFNA YMCA
DONATE BLOOD
(C-3028)


# கண்ணீர் அஞ்சலி



கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலையின் அதிபர் **அ. கிருபாகரன்** அவர்களின் அன்புத் தந்தை

## நாகரட்ணம் அழகசுந்தரம்

பிறப்பு : 1942.04.11 இறப்பு : 2021.11.16

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-3033)

இணுவில் மேற்கு,
இணுவில்.

முருகையா புவீஸ்வரன் (JP)
ஸ்தாபகர் - இணுவையூர்
முருக ஜீவு அறக்கட்டளை
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.